medienCOACHING
für Eltern
**Mediencoaching** பெற்றோர்களுக்கு

# ஆரம்பப்பாடசாலை மாணவர்கள் மத்தியில் நவீன ஊடகங்கள

நவீன ஊடகங்களான கணனி, இணையத்தளம், கைத்தொலைபேசி மற்றும் தொலைக்காட்சிகூட இவ்வயதுப் பிள்ளைகளை மிகக்கவரும் சாதனங்களாகும். இவைபற்றி முதலில் அறிவதுடன் பயனுள்ளதாகவும் பொறுப்புடனும் பாவிக்கவேண்டும். இதற்குப் பெற்றோரின் பங்களிப்பு அதிகம் தேவை.

## முக்கியமானவற்றின் சுருக்கம்.

<u>உங்கள் பிள்ளைகள் ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்கவேண்டும்.</u> பிள்ளைகள் தாமாகவே இணையத்தளத்தினுள் செல்லவோ அல்லது வசீகரமான தொலைக்காட்சி உலகத்தைச் சரியானமுறையில் பாவிப்பதற்கு ஆற்றல் கொண்டவர்களல்ல. பிள்ளைகளுக்குள்ள அறியும் ஆற்றலை நவீன ஊடகத்தினூடாகத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் வழி-நடத்துவதைப் பெரும் சவாலாக ஏற்பது மட்டுமன்றி நேரத்தையும் அர்ப்பணிக்கவேண்டும். இவ்வயதில் பொருத்தமான திசையில் செல்வதற்கும், பொறுப்பான மற்றும் சிக்கலான ஊடகங்களின் மத்தியில் சரியான முறையில் நடந்துகொள்ளவும் வையுங்கள்.

<u>நவீன ஊடகங்களைப் பற்றி விவாதியுங்கள்.</u> யார் உறுதுணையாகவிருந்து வழிநடத்த விரும்புகிறார்களோ அவர்கள் அவைபற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். பிள்ளைகள் ஊடகங்களை வேறுபட்ட முறையிலும், பெரியவர்களைவிட வேறுபட்ட பிரயோகங்களையும் பாவிப்பர். பிள்ளைகள் அதிகம் விரும்பும் ஊடகங்கள், ஒளி-ஒலிபரப்புகள், கணனிவிளையாட்டுகளைப் பற்றி நீங்கள் நன்கறிந்து கொள்வதன் மூலம் உங்களது தனிப்பட்ட கருத்தை அமைத்துக் கொள்ளலாம். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் ஊடகம் பற்றிய உங்கள் சொந்தத்திறமையை விஸ்தரித்து அதைப் பிள்ளைகளுக்கும் வழங்குங்கள். இந்த ஊடகத்திறமைதான் வீட்டுக்கும் வெளியேயும் ஊடகப்பயன்பாட்டுக்கு நன்மைபயக்கும் பாதுப்பான, பயனுள்ள ஒரேயொரு உத்தரவாதமாகும்.

<u>பிள்ளைகளுடன் நவீன ஊடகங்கள் பற்றிக்கதையுங்கள்.</u> பிள்ளைகள் எப்படி நவீனஊடகங்களை அனுபவிக்கின்றார்களென யார் அறிந்திருக்கிறார்களோ, அவர்களால் மட்டுமே தகுந்தமுறையில் உறுதுணையாகவும் வழிநடத்தியாகவும் இருக்கமுடியும். எனவே பிள்ளைகளின் ஆர்வம், அவர்களுக்குப் பிடித்தவை, எவற்றை அதிகம் விரும்புகிறார்கள், எவற்றை அறியவிரும்புகிறார்கள் போன்றன பற்றிச் சொல்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஆனால் உங்கள் தனிப்பட்ட கருத்துக்களையும் அனுபவங்களையும் மற்றும் நவீனஊடகங்கள் பற்றிய நன்மை தீமைகளைப் பற்றியும் சொல்லுங்கள்.

<u>உங்கள் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பளியுங்கள்.</u> ஆரம்பப்பாடசாலைக் காலங்களில் பிள்ளைகளுக்கு குறிப்பிடப்பட்டளவு நிச்சயமும் பாதுகாப்பும் தேவை. இணையத்தளத்தினால் உண்டாகும் ஆபத்துக்களையும் துணிகரச் செயற்பாடுகளையும் சுலபமான முறைகளினால் நன்கு குறைத்துக் கொள்ளலாம். இவை பிள்ளைகளைப்பாதுகாக்கும் மென்பொருள், வடிகட்டும் பயன்பாடுகள், மட்டுப்படுத்தப்பட்ட கணனிப்பயன்பாடுகள் போன்ற தொழில்நுட்ப நடவடிக்கைகளாகும். உங்கள் பிள்ளைகளுக்கு வீட்டுக்கு வெளியேயும் நவீன ஊடகங்களுடன் தொடர்பு கொள்ளும் வசதியுள்ளது என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள். தொழில்நுட்பப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எல்லா இடங்களிலும் பொருத்தப்படவில்லை. ஆகையால் எங்கு, எப்படியான ஆபத்துக்களும், திகில்தருநிகழ்வுகளும் நடக்கலாம் என்று விளக்கமளியுங்கள். பிரச்சினைகள் உண்டாகும் சந்தர்ப்பத்தில் உங்களை நாடும்படியான நம்பிக்கையைப் பிள்ளைகளுக்கு அளியுங்கள்.

<u>பயன்பாட்டு விதிமுறைகளை உடன்பாட்டுக்குக் கொண்டு வாருங்கள்.</u> எவ்வளவுநேரம், எங்கு, எவற்றுக்கு அனுமதியென்பதைப் பிள்ளையுடன் சேர்ந்து தீர்மானியுங்கள். மேலும் இவற்றைக் கடைப்பிடிக்காத கட்டத்தில் அதன் பிரதிபலிப்பு என்ன என்பதையும் தீர்மானியுங்கள். பயன்பாட்டு விதிமுறைகள் பிள்ளைகளுக்கு நம்பகமான வரையறையை வழங்குவதுடன் மீண்டும் மீண்டும் கவலையாக உரையாடுவதையும் தடுக்க உதவும். வயது கூடக்கூட உங்கள் பிள்ளை சொந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் தன்மையைப்பெறும். ஆகவே பயன்பாட்டு விதிமுறைகளை அதற்கேற்ப மாற்றிமையுங்கள். மேலதிக தகவல்களை „Nutzungsre-geln" என்ற எமது தகவற்படிவத்திற் பார்க்கவும்.

<u>ஊடகப்பாவனைக்கு வரையறைகளை விதியுங்கள்.</u> நவீன ஊடகங்களிலும் தொலைக்காட்சிகளிலும் வருபவை எல்லாம் பிள்ளைகளுக்குப் பொருத்தமானவையல்ல. அதேபோல் எந்நேரமாயினும் ஊடகப்பாவனையினளவு ஒருமணித்தியாலத்தை விடக் குறைவாக அமையவேண்டும். இதற்கெனச் சில ஆலோசனைகள்.

• வயதிற்கு ஏற்றமாதிரியான உள்ளடக்கங்களைக் கவனிக்கவும். சிக்கலான, குழப்பமான, பிரச்சினைகளை விளைவிக்கக் கூடிய விடயங்களைத் தவிர்க்கவும் அல்லது அங்கு துணையாகவிருக்கவும். வயதெல்லையை அவதானிக்கவும் உண்மையான, உண்மைபோன்ற வன்முறைகளைத் தவிர்க்கவும்.

• முற்கூட்டியே எந்த தொலைக்காட்சிநிகழ்ச்சி, இணையத்தளவலையகம், விளையாட்டு போன்றவற்றுக்கு அனுமதியென்பதைத் தீர்மானிக்கவும்.

• தொலைக்காட்சி, கணனி, இணையத்தளம் என்பன பிள்ளைகளின் அறைக்கு உரியவையல்ல.

• இவ்வயதிற்குக் கையடக்கத் தொலைபேசி முக்கியமானதொன்றல்ல. இளம்வயதை அடைந்தபின் கையடக்கத் தொலைபேசியினூடாக இணையத்தளத்தினுள் செல்வதற்கு அனுமதி வழங்கவும். கட்டணக் கட்டுப்பாட்டுக்காக ஏற்கனவே பணம் ஏற்றிப் பாவிக்கும் முறைகளைப் பயன்படுத்தவும்.

• சமூகக்கணனிக் கட்டமைப்புக்களான பேஸ்புக் போன்றன ஆரம்பப் பள்ளிமாணவர்களுக்குப் பொருத்தமானதல்ல. இணையத்தளமூல உரையாடல் (சற்) செய்வது பிள்ளைகளின் சற்றில் மட்டும்.

• ஊடகப்பாவனையை மட்டுப்படுத்தல்:

6 தொடக்கம் 9 வயதுவரை: நாளொன்றுக்கு 30 முதல் 45 நிமிடங்கள், ஆகக்கூடியது ஒரு மணித்தியாலங்கள்.

12 வயது வரை : நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலங்கள், ஆகக்கூடியது ஒன்றரை மணித்தியாலங்கள்.

அல்லது: பிள்ளைகள் ஊடகங்களைப் பயன்படுத்தும் நேரத்தைவிட இருமடங்கு நேரங்களை உண்மையான மனிதர்களுடன் அதாவது விளையாட்டுக்கள், உடற்செயற்பாடு போன்றவற்றில் செலவிடவேண்டும்.

• ஊடகங்களைப்பாவிக்கும் நேரத்தை நாட்பொழுதில் பயனுள்ளவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். உணர்ச்சியைத்தூண்டும் ஒளி-ஒலிபரப்புகள் அல்லது விளையாட்டுகள் படுக்கப்போகமுன்னர் பொருத்தமானவையல்ல.

<u>நிலைப்பாட்டை விளக்குங்கள்.</u> தொலைக்காட்சியிலோ அல்லது இணையத்தளத்திலோ குறிப்பிடப்பட்ட விடயங்கள் உங்களுக்குப் பிடிக்காவிடின் பிள்ளைகளுக்கு விளக்கங் கொடுங்கள். குறிப்பிடப்பட்ட தொலைக்காட்சி ஒளிபரப்புகளைப் பார்வையிடுவதை அல்லது இணையத்தளத்தினுள் தன்னிச்சையாக நுழை-வதை எதற்காக நீங்கள் விரும்பவில்லை என்பதற்கும் விளக்கமளியுங்கள்.

<u>நீங்கள் உங்கள் பிள்ளைக்கு முன்னோடியாகவிருங்கள்.</u> கையடக்கத்தொலைபேசி, கணனி அல்லது தொலைக்காட்சிக்கு முன்னால் அதிக நேரத்தைச் செலவிடுபவர்களால் பிள்ளைகளின் ஊடகப்பாவனையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது கடினம்.

நவீன ஊடகங்களின் நன்மைகளையும் காட்டிக் கொடுங்கள். நவீன ஊடகங்களைப் பயனுள்ளதாகப் பயன்படுத்துபவர்கள் பலவற்றை அறிவதுதோடு ஆனந்தமும் அடைவர். ஆரம்பப்பாடசாலை மாணவர்கள் பெர-ியவர்களின் உதவியுடன் வாழ்த்துமடல்கள் அமைப்பது, படங்களைநிர்வகிப்பது, புகைப்பட அல்பம்தயாரிப்பது, ஒலிகலந்தபுதிர் அமைப்பது, கதைகள்(படத்துடனிணைந்த)சொல்வது, கேட்கும்விளையாட்டு, குறும்படங்கள்தயாரிப்பது, சிறுஅறிவிப்புகளைத் தயாரிப்பது போன்றவற்றைச் செய்யலாம்.

---

மேலதிக தகவல்களை அதாவது ஊடகக்கல்வி, ஊடகத்திறமை, சமூகக்கணனிக்கட்டமைப்பு, விளையாட்டுக்கள், ஊடகப்பாவனை தொடர்பான சட்டநிலைப்பாடுகள் பற்றி www.elternet.ch எனும் பக்கத்திற் பார்க்கலாம்.

CC BY NC ND

**Ein Angebot von elternet.ch**
**In Zusammenarbeit mit der Gesundheitsförderung Schweiz**
**Entwickelt in Zusammenarbeit mit der Stiftung Kinderschutz Schweiz**